# TAMILNADU POWER ENGINEER'S ORGANISATION

Regd. No.2998/CNI
Under Indian Trade Union Act, 1926
Affiliated to COTEE & EEFI

No.27, Mosque Street, Chepauk,
Chennai - 600 005.
Phone : 2854 8529
Fax : 2851 6574
E-mail : coteecitu@gamil.com
tnpeogs@gmail.com

President
**T. ARIVAZHAGAN**

General Secretary
**R. SRIDHAR**

Treasurer
**K. JEEVANANDAM**

***ORGANISING SECRETARY***

K. Arul Selvan

***DEPUTY GENERAL SECRETARIES***

S. Appadurai
M. Parimelazhagan

***VICE PRESIDENTS***

D. Kumar
R. Guruvel
A. Palani
V.K. Thanikaiarasu
M. Rama Subhu
K.R. Jothiraman
G. Sankareswaran
P. Aarumugham
V. Lakshminarayanan

***SECRETARIES***

R. Adalarasu
P. Kumaresapandian
M. Muni Raj
S. Marimuthu
K.S. Meenakshi Sundaram
A.E. Arunachalam
K.R. Alagarsamy
J. Balamurugan
B. Nithiya
J.J. Pradeep

பெறுதல் 20-06-2013

**தலைவர் அவர்கள்,**
தமிழ்நாடு மின்சார வாரியம் லிமிடெட்,
144, அண்ணா சாலை,
சென்னை-600 002.

அய்யா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரியம் - பணி நியமனம் - தொழில் நுட்ப உதவியாளர் பதவிக்கு நியமனம் செய்திட - மின்னியல் 950 நபர்கள், இயந்திரவியல் 50 நபர்கள் - மின்வாரியம் தற்போது அறிவிப்பு செய்துள்ளதில் கடந்த 2009-ம் ஆண்டு பணி நியமனம் நடைபெற்ற போதும், நேர்காணலுக்கு அழைக்கும் போதும், தேர்வு செய்யும் போதும் நடைபெற்ற குறைபாடுகள், தவறுகள், மற்றும் விதி மீறல்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரி செய்திட - தற்போதைய தொழில் நுட்ப உதவியாளர் பணி நியமனத்தில் மீண்டும் அத்தகைய பாதிப்புகள் ஏற்படாதவாறு நேர்காணலுக்கு அழைத்தல் மற்றும் தேர்வு செய்திட கோருதல் - தொடர்பாக.

* * * * *

வணக்கம்! எங்களது அமைப்பின் சார்பில் மின்வாரியத்திடமும், சட்டமன்றத்திலும் நாங்கள் தமிழ்நாடு மின்வாரியத்தில் உள்ள காலியிடங்களை நிரப்பிட வேண்டும் என்ற தொடர் வேண்டுகோள் விடுத்ததை ஏற்று தமிழ்நாடு மின்சார வாரியம் இதன் ஒரு பகுதியாக தற்போது தொழில் நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவிக்கு 950 நபர்களும், தொழில் நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) பதவிக்கு 50 நபர்களும், பணி நியமனம் செய்வதற்கு அறிவிப்பு செய்யப்பட்டு, அதற்குரிய பணிகள் தமிழ்நாடு மின்வாரியத்தில் நடைபெற்று வருகிறது. இதற்கு எங்களது அமைப்பின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 2009-ம் ஆண்டு, தமிழ்நாடு மின்வாரியத்தில் 1100 தொழில் நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவிகள் நிரப்பப்பட்டன. மேலும் இந்த 1100 பணியிடங்களை நிரப்பும் போது இதற்கான நேர்காணலுக்கு அழைப்பதற்கான தகுதிகளை நிர்ணயம் செய்யும் போதும், நேர்காணலில் பங்கேற்றவர்களில் இருந்து தேர்வு செய்வதற்கு தகுதிகளை நிர்ணயம் செய்யும் போதும் கீழ்க்கண்ட தவறுகளும், குறைபாடுகளும், விதி மீறல்களும் இருந்ததால் ஏற்பட்ட பாதிப்பால் பலர் தேர்வாக

முடியாமல் போனது. தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ள 1000 தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை நிரப்பும் போது, 2009-ல் நடைபெற்ற கீழ்க்கண்ட தவறுகளையும், குறைபாடுகளையும், விதிமீறல்களையும் சரி செய்து நேர்மையான மற்றும் சரியான முறையில் பணிநியமனம் செய்திட கேட்டுக் கொள்கிறோம்.

## I. பட்டய படிப்பில் பெற்ற பருவ நிலை மதிப்பெண்ணில் (Semester Mark) எந்தெந்த பருவநிலை மதிப்பெண்ணை எடுத்துக் கொள்வது என நிர்ணயம் செய்து, தேர்வு செய்வது குறித்து.

**2009-ல் T.A. பணி நியமனத்தின் போது மின்வாரியம் செய்தது:**

2009-ல் பணியிடங்களை நிரப்பும் போது நடைபெற்ற நேர்காணலில் 2003-ம் ஆண்டு வரை பட்டயப் படிப்பு படித்து முடித்து பட்டயம் பெற்றவர்களும், 2003-ம் ஆண்டுக்கு பிறகு அதாவது 2004 முதல் பட்டயப் படிப்பு படித்து முடித்து பட்டயம் பெற்றவர்களும், நேர்காணலில் பங்கேற்றனர். அனைவருக்கும் தேர்வு செய்வதற்கு மதிப்பெண்ணை கணக்கிடும் போது, அவர்கள் மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் பருவங்களில் பெற்ற மதிப்பெண்களின் சராசரியை கணக்கிட்டு தேர்வு செய்யப்பட்டது. இப்படி, III, IV, V, VI பருவங்களின் சராசரியை தேர்வு செய்ய கணக்கீடு செய்து நிர்ணயம் செய்ததால் 2003-ம்ஆண்டு வரை பட்டயப் படிப்பு முடித்து பட்டயம் பெற்ற பல சீனியர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர் என தெரிவித்துக் கொள்கிறோம்.

**தற்போதைய T.A. பணி நியமனத்தில் சரி செய்திட வேண்டுவது:**

1. நேர்காணலில் பங்கேற்ற 2003-ம் ஆண்டு வரை பட்டய படிப்பு படித்து முடித்து பட்டயம் பெற்றவர்களுக்கு (அதாவது 1999-2000 கல்வி ஆண்டில் பட்டயப் படிப்பில் முதல் ஆண்டு சேர்ந்தவர்கள்) ஐந்தாம் பருவம் மற்றும் ஆறாம் பருவம் (V & VI Semester Only) மதிப்பெண்கள் மட்டுமே சராசரி எடுத்து தேர்வு செய்ய வேண்டும். ஏற்கனவே 2009-ல் III, IV, V, VI Semester மதிப்பெண்களின் சராசரியை கணக்கில் எடுத்ததை தற்போது கைவிட வேண்டும்.

2. நேர்காணலில் பங்கேற்போரில் 2000-2001 கல்வி ஆண்டில் முதலாம் ஆண்டு பட்டயப் படிப்பில் சேர்ந்து 2003-க்கு பிறகு பட்டயப் படிப்பு முடித்து பட்டயம் பெற்றவர்களுக்கு III, IV, V, VI Semester மதிப்பெண்களின் சராசரியை எடுத்து தேர்வு செய்ய வேண்டும்.

**மேற்கண்டவாறு செய்ய வேண்டுவதின் காரணமும், நியாயமும், விதிமுறையும்:**

1. தமிழக தொழில் நுட்ப கல்வி இயக்ககம் 1999-2000-ம் கல்வி ஆண்டு வரை முதலாம் ஆண்டு பட்டயப் படிப்பில் சேர்ந்தவர்க்கு அப்போது இருந்த பாடத்திட்ட முறை அடிப்படையில் கடைசி இரண்டு பருவ தேர்வுகள் (V & VI Semester) மதிப்பெண்கள் சராசரி அடிப்படையில் தர சான்றிதழ் (Classification) வழங்கியது. எனவே 1999-2000 ஆண்டு வரை முதலாம் ஆண்டு பட்டயப் படிப்பில் சேர்ந்தவர்கள் (அதாவது 2003-ல் பட்டயம் பெற்றவர்கள்), அப்போதைய பாடத்திட்டத்தின்படி தங்களின் எதிர்காலத்தை மேன்மைபடுத்திக் கொள்ள V, VI Semester-களில் கூடுதல் கவனத்தோடு படித்து அதிக மதிப்பெண் பெற்றிட அறிவுறுத்தப்பட்டனர். தமிழ்நாடு மின்வாரியமும், இதர நிறுவனங்களும், தொழில்

நுட்ப கல்வி இயக்கத்தின் முடிவின்படி அப்போதைய பாடத்திட்ட முறையின்படி 2001-க்கு முன்பு பட்டய பொறியாளர்களை பணி நியமனம் செய்யும் போது V, VI Semester மதிப்பெண்களை மட்டுமே சராசரி கணக்கிட்டு தேர்வு செய்தனர். தமிழ்நாடு மின்சார வாரியமும் 2001-க்கு முன்பு அதாவது 1998-ம் ஆண்டு நடைபெற்ற பணி நியமனம் வரை V, VI Semester மதிப்பெண்களை மட்டுமே சராசரியாக எடுத்து தேர்வு செய்து நியமனம் நடைபெற்றுள்ளது என தெரிவித்துக் கொள்கிறோம்.

2. தமிழக தொழில் நுட்ப கல்வி இயக்ககம் 2000-2001-ம் கல்வி ஆண்டு முதல் முதலாம் ஆண்டு பட்டய படிப்பில் சேர்ந்தவர்களுக்கு (2003-க்கு பிறகு பட்டயம் பெற்றவர்கள்) புதிய பாட திட்ட முறை அடிப்படையில் III, IV, V, VI Semester-களின் மதிப்பெண்களின் சராசரி அடிப்படையில் தர சான்றிதழ் (Classification) வழங்கியுள்ளது. எனவே தொழில் நுட்ப கல்வி இயக்ககத்தின் முடிவின்படி 2000-2001-ம் கல்வி ஆண்டு முதல் முதலாம் ஆண்டு பட்டயப் படிப்பில் சேர்ந்தவர்ளுக்கு, புதிய பாடத்திட்டத்தின்படி III, IV, V, VI Semester-களில் கூடுதல் கவனத்தோடு படித்து அதிக மதிப்பெண்கள் பெற்று எதிர்காலத்தை மேம்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டனர். ஆகவே 2003-க்கு பிறகு பட்டயம் பெற்று நேர்காணலில் பங்கேற்பவர்களுக்கு மட்டுமே III, IV, V, VI Semester-களின் மதிப்பெண்களின் சராசரியை கணக்கிட்டு தேர்வு செய்து பணி நியமனம் செய்யப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

## II. <u>அதிகபட்ச வயது வரம்பு குறித்து:</u>

<u>2009-ல் T.A. பணிநியமனத்தின் போது மின்வாரியம் செய்தது:</u>

நேர்காணலுக்கு அழைப்பதற்கும், நேர்காணலில் பங்கேற்றவர்களை தேர்வு செய்யும் போதும் ஒவ்வொரு வகுப்பிற்கும் (OC/BC/MBC/SC/ST) அதிக பட்ச வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டு அந்த வயது வரம்பை தாண்டியவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படவில்லை மேலும் நிர்ணயம் செய்யப்பட்ட அதிக பட்ச வயது தாண்டியவர்கள் எவரும் தேர்வு செய்யப்படவில்லை என தெரிவித்துக் கொள்கிறோம்,

<u>தற்போது அறிவிக்கப்பட்டுள்ள T.A. பணி நியமனத்தில் சரி செய்திட வேண்டுவது:</u>

தமிழ்நாடு மின்வாரிய சர்வீஸ் ரெகுலேசன் அடிப்படையில் பத்தாம் வகுப்பிற்கு (SSLC) அதிகமாக அதாவது +2, பட்டம் பெற்றவர்களுக்கு அதிக பட்ச வயது வரம்பு முழுமையாக தளர்த்தி பணி நியமனம் செய்திட வழி வகை செய்துள்ளது. மேலும் பட்டயம் (Diploma) மற்றும் ITI கல்வியை +2-க்கு இணையாக கருத வேண்டும் என தமிழக அரசு ஆணை உள்ளது. எனவே SSLC-க்கு அதிகமாக கல்வித் தகுதியாக பட்டயம் இருப்பதால் பட்டயம் படித்தவர்களை கொண்டு நிரப்பப்படும் T.A. பணி நியமனத்தில் அதிக பட்ச வயது வரம்பு முழுமையாக தளர்த்தப்பட வேண்டும். ஏற்கனவே 2009-ல் மதிப்பெண் கண்கிடுவதில் மின்வாரியம் செய்த தவறினால் அப்போது இதனால் தேர்ச்சியடையாதவர்கள் தற்போது அதிகபட்ச வயது வரம்பு நிர்ணயம் செய்தால் தற்போது மீண்டும் வாய்ப்பு கிடைக்காமல் பாதிக்கப்படுவார்கள் என தெரிவித்துக் கொள்கிறோம்.

## iii. <u>தமிழ்நாடு மின்சார வாரியத்தின் முடிவின்படி நிரப்ப வேண்டிய காலியிடங்களுக்கு ஏற்ப, நேர்காணலுக்கு அழைக்கப்படுவோரின் எண்ணிக்கை குறித்து:</u>

<u>2009-ல் T.A. பணி நியமனத்தின் போது மின்வாரியம் செய்தது:</u>

உச்சநீதி மன்ற தீர்ப்பின்படி மின்வாரியத்தில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை (Apprentice) தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு முறை பணிநியமனம் செய்யும் முன்பு பத்திரிக்கையில் விளம்பரம் செய்து மின்வாரிய பயிற்சியாளர்கள் சென்னையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்தில் வந்து பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறது. அதன் அடிப்படையில் அப்போது மின்வாரிய தலைமை அலுவலகம் வந்து பதிவு செய்யும் மின்வாரிய பயிற்சியாளர்கள் (Apprentice) அனைவருக்கும் மின்வாரியம் நேர்காணலுக்கு வர கடிதம் அனுப்புகிறது.

இதன்படி 2009-லும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்வாரிய பயிற்சியாளர்களுக்கு (Apprentice) மின்வாரியம் நேர்காணலுக்கு அழைத்தது. மேலும் இது தவிர 2009-ல் 1100 காலியிடங்களை நிரப்ப 1:5 Ratio அடிப்படையில் 5500 நபர்களை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து கேட்டுப் பெற்று, 5500 நபர்களுக்கும் நேர்காணலுக்கு வர தமிழ்நாடு மின்சார வாரியம் அழைப்பு கடிதம் அனுப்பியது. இதனால் சீனியர்கள் (5500+பயிற்சியாளர்கள்) அதிக எண்ணிக்கையிலான நபர்களோடு நேர்காணலில் போட்டி போட வேண்டியிருந்தது என தெரிவித்துக் கொள்கிறோம்

<u>தற்போது அறிவிக்கப்பட்டுள்ள T.A. பணிநியமனத்தில் சரி செய்திட வேண்டுவது:</u>

தமிழக அரசு ஆணைப்படி காலியிடங்களை நிரப்பும் போது 1 காலியிடத்திற்கு தங்களுக்கு தேவையான தகுதியான நபரை தேர்ந்தெடுக்க 5 நபர்களிடம் மட்டுமே நேர்காணல் நடத்தப்பட வேண்டும். 2009-ல் 1100 பணியிடம் நிரப்ப பதிவு செய்ய Apprentice மற்றும் 5500 நபர் என கூடுதலான எண்ணிக்கயில் நேர்காணல் நடத்தப்பட்டது. இது பணி நியமனம் குறித்த தமிழக அரசு ஆணைக்கு எதிரானதாகும். தற்போது தொழில் நுட்ப உதவியாளர் (மின்னியல்) பதவிக்கு 950 பணியிடங்கள் நிரப்பிட அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு ஆணைப்படி 950 பணியிடங்களை நிரப்பிட மின்வாரியம் 1:5 Ratio அடிப்படையில் 4750 நபர்களிடம் மட்டுமே நேர்காணல் நடத்திட வேண்டும். ஆகவே உச்ச நீதி மன்ற தீர்ப்புப்படி நேர்காணலுக்கு அழைக்கப்பட வேண்டிய மின்வாரிய பயிற்சியாளர்களின் (Apprentice) எண்ணிக்கை போக மீதம் உள்ள எண்ணிக்கைக்கு மட்டுமே வேலை வாய்ப்பு அலுவலகத்தில் கேட்டு பெற்று நேர்காணலுக்கு அழைக்க வேண்டும். அதாவது தற்போது 950 பதவிக்கு நேர்காணல் செய்யப்பட வேண்டியவர்கள் மின்வாரிய பயிற்சியாளர்கள் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் மூப்பு அடிப்படையில் பரிந்துரை செய்யப்பட்டவர்கள் இரண்டையும் சேர்த்து மொத்தமாக 4750 நபருக்கு மட்டுமே நேர்காணலுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

## iv. <u>நேர்காணலில் வாய் வழி கேள்விக்கு (Vai Va Voice) அளிக்கப்படும் மதிப்பெண் குறித்து:</u>

<u>2009-ல் T.A. பணி நியமனத்தின் போது மின்வாரியம் செய்தது:</u>

2009-ல் தொழில் நுட்ப உதவியாளர் பணிநியமனத்தின் போது நேர்காணலில் வாய் வழி கேள்விக்கு (Vai Va Voice) 15 மதிப்பெண்கள் வழங்கப்பட்டது. பட்டயக் கல்வியில் பெற்ற மதிப்பெண்ணை 85% மாற்றம் செய்து, இரண்டையும் சேர்த்து வரும் மொத்த மதிப்பெண் அடிப்படையில் சமூக வகுப்பு வாரியாக தேர்வு செய்யப்பட்டது. பட்டயக் கல்வியில் என்னை விட குறைந்த மதிப்பெண் பெற்றிருந்த பலர் பண பலத்தையும், அரசியல் செல்வாக்கையும் பயன்படுத்தி நேர்காணலில் வாய் வழி கேள்விக்கு (Vai Va Voice) 15-க்கு 15 மதிப்பெண்ணை பெற்று தேர்வு செய்யப்பட்டனர். பலர் நேர்காணலில் சிறப்பாக வாய்

வழி கேள்விக்கு சரியான பதில் அளித்தும் அவர்களுக்கு மதிப்பெண் குறைவாகவே இருந்தது. மேலும் வாய் வழி கேள்விக்கு அதிகாரிகள் மதிப்பெண்ணை மாற்றும் வகையில் பென்சிலால் மட்டுமே மதிப்பெண்ணை பதிவு செய்தார்கள் என தெரிவித்துக் கொள்கிறோம்.

**தற்போது அறிவிக்கப்பட்டுள்ள T.A. நியமனத்தின்போது மின்வாரியம் செய்திட வேண்டுவது:**

**பணி நியமனத்தில் பண பலத்தை குறைத்திட மற்றும் தவிர்த்திட, தகுதியானவர்கள் தேர்ச்சி பெற்றிட:**

1. வாய் வழி கேள்விக்கான (Vai Va Voice) மதிப்பெண் 15-ல் இருந்து 5 ஆக குறைத்திட வேண்டும். பட்டயப் படிப்பில் பெற்ற மதிப்பெண்ணை 85% கணக்கிடுவதற்கு பதிலாக 95% கணக்கிடும் வகையில் மாற்றம் செய்திட வேண்டும்.

2. வாய் வழி கேள்விக்காக அதிகாரிகள் வழங்கும் மதிப்பெண்ணை பென்சிலால் பதிவு செய்யாமல் பேனாவால் பதிவு செய்து, மதிப்பெண் வழங்கும் அதிகாரி அவரின் சுருக்கொப்பத்தை பதிவு செய்திட வேண்டும். மேலும், விண்ணப்பத்திலும் இந்த மதிப்பெண் நேர்காணலின் போது போனாவால் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதோடு, நேர்காணல் நடவடிக்கைகள் (ஒளி, ஒலி) அனைத்தையும் வீடியோ மூலம் பதிவு செய்யப்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

எனவே, மின்வாரியத்தின் நல்ல வளர்ச்சிக்காகவும், பணிநியமனம் செய்யும் போது, நேர்மையான முறையில் தகுதியான நபர்களை தேர்வு செய்திடவும், நீண்ட காலமாக பட்டயம் படித்து முடித்து நிரந்தர பணி கிடைக்கும் என கூடுதல் அனுபவத்துடன் காத்திருக்கும் சீனியர்களுக்கு இந்த நேர்காணல் மூலம் பணி நியமனம் கிடைத்திட, மேற்கண்ட அனைத்து குறைபாடுகளையும் சரி செய்து நடவடிக்கை எடுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

T. Arivu

தி. அறிவழகன்

தலைவர்/தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பு